


புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351




திங்கள் ❖ ஜூலை. 10, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 276 ❖ ரூ.10

### ஆளுநர் மீது புகார் தெரிவித்து குடியரசுத் தலைவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின்

# கடிதம்

## டெல்லியில் முகாமிட்டுள்ள ஆளுநர் ஆர்.என்.ரவி, உள்துறை அமைச்சர் அமித்ஷாவை சந்தித்து பேசிய நிலையில் திமுக சுறுசுறுப்பு

**சென்னை, ஜூலை. 10–**

**ஆளுநர் - திமுக அரசு இடையே பனிப்போர் முற்றிவரும் நிலையில், ஆளுநர் ஆர்.என்.ரவி மீது புகார் தெரிவித்து, குடியரசு தலைவருக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் 15 பக்கம் கடிதம் அனுப்பியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**



அமைச்சர் செந்தில் பாலாஜியை அமைச்சரவையை விட்டு நீக்குவதாக ஆளுநர் சமீபத்தில் அறிவித்தார். இது தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் தலையீட்டால் அந்த உத்தரவை நிறுத்தி வைப்பதாக அன்றிரவே முதல்வருக்கு ஆளுநர் கடிதம் எழுத பரபரப்பு அடங்கியது.

அப்போது, அட்டர்னி ஜெனரலின் ஆலோசனையைப்பெற்று அதன் அடிப்படையில் செயல்படுமாறு ஆளுநருக்கு மத்திய அமைச்சர் அமித் ஷா அறிவுறுத்தினார். இதையடுத்து அதற்கான முயற்சியில் ஆளுநர் இறங்கினார். இந்நிலையில், ஆளுநருக்கு தமிழக சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி கடிதம் எழுதியிருந்தார். அதில் நிலுவையில் உள்ள மசோதாக்களுக்கு விரைவாக ஒப்புதல் அளிக்கும்படியும், அதிமுக முன்னாள் அமைச்சர்கள் மீதான வழக்குகளில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அனுமதியளிக்கும்படியும் கேட்டிருந்தார்.

ஆனால், இதற்கான கோப்புகள் வரவில்லை என்று ஆளுநர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதை மறுத்த சட்ட அமைச்சர் ரகுபதி, ஆளுநர் மாளிகையில் கோப்புகளை பெற்றுக் கொண்டு ஒப்புதல் அளித்தற்கான ஆதாரங்களையும் வெளியிட்டார். இந்தச்சூழலில், ஆளுநர் ஆர்.என்.ரவி மீது புகார் தெரிவித்து, குடியரசு தலைவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். ஆளுநர் - திமுக அரசு இடையே பனிப்போர் முற்றிவரும் நிலையில், ஆளுநர் ஆர்.என்.ரவி மீது புகார் தெரிவித்து, குடியரசு தலைவருக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் 15 பக்கம் கடிதம் அனுப்பியுள்ளதாகதகவல் வெளியாகியுள்ளது.

முன்னதாக டெல்லியில் முகாமிட்டுள்ள ஆளுநர் ஆர்.என்.ரவி, சனிக்கிழமை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவை சந்தித்து பேசினார். வரும் நாட்களில் மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மெக்வால், அட்டர்னி ஜெனரல் வெங்கட்ரமணி ஆகியோரை சந்தித்து செந்தில் பாலாஜி விவகாரம் தொடர்பாக ஆளுநர் ஆலோசனை நடத்த உள்ளதாகவும் கூறப்படுகிறது.

# எம்பிபிஎஸ்., பிடிஎஸ்., படிப்புக்கு விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிப்பு அமைச்சர் மா.சுப்பிரமணியன்

அரூர், ஜூலை. 10–

எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., படிப்புக்கு விண்ணப்பிக்க மேலும் 2 நாட்கள் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.



அரூரில் அரசு மருத்துவமனையில் சிடி ஸ்கேன் மையத்தை திறந்து வைத்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் பின்னர் பேட்டியளித்தார். அப்போது அவர் கூறுகையில், ''அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் நடைப்பயிற்சி மேற்கொள்வோரை உற்சாகப்படுத்தும் பணியாக ஹெல்த்வாக் எனப்படும் 8 கிலோ மீட்டர் துாரம் நடைபாதை சாலை அமைக்கும் பணி விரைவில் முதல்வரால் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. தமிழகத்தில் முதுகலை படிப்பில் சேர புதிய உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. கடந்த கால நடைமுறைகளே தொடர்கிறது.

தமிழ்நாட்டை பூர்விகமாகக் கொண்டவர்கள் மற்றும் தமிழகத்திலோ அல்லது வெளியிலோ இன்டன்சீப் காலம் உள்பட எம்.பி.பி. எஸ். ,பி. டி.எஸ், முடித்தவர்கள், அரசு மற்றும் சுயநிதி நிறுவனங்களின் நேட்டிவிட்டி சான்றுகளுடன் அரசு ஒதுக்கீட்டில் முதுகலை இடங்களுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள் என்பதுதான் அமுலில் உள்ளது. பிற மாநிலங்களை பூர்விகமாகக் கொண்டு, தமிழகத்தில் இன்டன்சிப் காலம் உள்பட எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ். முடித்தவர்கள் திறந்த வகை (ஓபன் காம்பிடிஷன்) அரசு ஒதுக்கீடு முதுகலை இடங்களுக்கு மட்டுமே விண்ணப்பிக்க தகுதியுடைவர்கள்.

இந்தியாவிலேயே முதல் முறையாக உடல் உறுப்புமாற்று ஆணையம் தமிழகத்தில்தான் தொடங்கப்பட்டது. கடந்த 10 ஆண்டுகளாக இந்த 2 வருடங்களுக்கு முன்பு வரை உடல் உறுப்பு தானம் பெறுவது தமிழகத்தில் உள்ள 36 மருத்து கல்லூரியில் 11 மருத்துவமனைகளில் மட்டுமே லைசன்ஸ் இருந்தது. தற்போது முதல்வர் அவர்களால் தருமபுரி உட்பட 36 மருத்துவ கல்லூரி மருத்துவமனைகளுக்கும் லைசன்ஸ் பெறப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி முதல்வர் காப்பீட்டு திட்டத்தின் கீழ் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காப்பீட்டுத் தொகையாக ரூ.40 லட்சம் வரை வழங்கப்படுகிறது. தமிழகத்தில் 20 ஆயிரம் மருத்துவர் பணியிடங்கள் உள்ளன. இதில் 1,021 காலிப்பணியிடங்கள் உள்ளன. இப்பணியிடங்களுக்கு 25 ஆயிரம் பேர் தேர்வெழுதியுள்ளனர். தேர்வில் தேர்ச்சி பெற்றவர்கள் விவரம் விரைவில் வெளியிடப்பட உள்ளது. இன்னும் 25 நாட்களில் முதல்வர் மூலம் பணி ஆணை வழங்கப்படவுள்ளது.

எம்.பி.பி.எஸ்., பி.டி.எஸ்., படிப்பை பொறுத்தவரை கடந்த ஆண்டு 36 ஆயிரத்து 206 பேர் விண்ணப்பித்திருந்தனர். இந்த ஆண்டு பதிவு செய்திருப்பவர்கள் 39 ஆயிரத்து 924. இதில் கடந்த மாதம் 28 ஆம் தேதி தொடங்கி 32 ஆயிரத்து 649 பேர் விண்ணப்பித்திருந்தனர். இதற்கான கடைசிநாள் 10 ந்தேதி (இன்று) என்றிருந்தது. விண்ணப்பிக்காதவர்களது பெற்றோர்களின் வேண்டுகோளின்படி மேலும் 2 நாட்கள் நீட்டித்து வரும் 12 ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என மாற்றம் செய்து அறிவிக்கப்பட்டுள்ளது. தகுதியானவர்கள் பட்டியல் வரும் 16 ந்தேதி சென்னையில் வெளியிடப்பட உள்ளது'' என்று தெரிவித்தார்.

# புதுக்கோட்டை மாப்பிள்ளையை கரம்பிடித்த போலாந்து நாட்டு மருமகள் தமிழ்கலாச்சார முறைப்படி தாலி கட்டினார்

**புதுக்கோட்டை, ஜூலை. 10–**

புதுக்கோட்டை மாப்பிள்ளையை கரம் பிடித்த போலாந்து நாட்டு மருமகள். இந்து முறைப்படி தாலி கட்டினார் உற்றார் உறவினர்கள் மகிழ்ச்சி.



புதுக்கோட்டை பூசத்துறை பகுதியை சேர்ந்தவர் பாலகிருஷ்ணன் புவனேஸ்வரி தம்பதியினர் பாலகிருஷ்ணன் திருச்சி பகுதியில் கைக்கடிகாரங்கள் பழுது பார்க்கும் கடையை வைத்து நடத்தி வருகிறார்.

இவரது மகன் அருணகிரி என்கின்ற அருண் பிரசாத் 22 வயதில் எம்பிஏ படித்துவிட்டு போலாந்து நாட்டில் வேலைக்காக சென்றார் அங்கு பணிக்கு சேர்ந்த பிறகு சிறிது காலத்தில் தனியாக கார்களை வாடகைக்கு விடும் டிராவல் ஏஜென்சி வைத்து நடத்தி வருகிறார். இந்த நிலையில் அவரது டிராவல் ஏஜென்சிக்கு அடிக்கடி பணிநிமித்தமாக அதே பகுதியை சேர்ந்த கிறிஸ்டோஃப் ரில்ஸ்கி மஷேனா போசனா தம்பதியரின் மகள் ஹனியா என்கின்ற அன்னாரில்ஸிகா என்ற பெண்ணுடன் தொடர்ச்சியாக பழக்கம் ஏற்படுகிறது இந்த பழக்க வழக்கம் நட்பாக மாறி காதலாக கனிந்து அருண் பிரசாத்தை ஹனியா திருமணம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கி இருவருமே போலாந்து நாட்டில் சட்டமுறைப்படி நிச்சயம் செய்து கொள்கின்றனர்.

இந்நிலையில் இது குறித்து உறவினர்களிடம் அருண்குமார் சொன்ன உடன் அருண்குமார் பெற்றோர் இங்கு இந்து முறைப்படி திருமணம் நடத்த வேண்டுமென வலியுறுத்துகின்றனர். இந்தியா கலாச்சாரம் மற்றும் இந்து மதநம்பிக்கை கொண்ட ஹனியாவும் இந்தியாவுக்கு வர வேண்டுமென ஒரே முடிவில் இங்கு நடைபெறும் திருமணத்திற்கு ஒப்புக்கொள்கிறார். இந்த நிலையில் இருவருக்கும் திருமணம் புதுக்கோட்டை அன்னவாசல் செல்லும் சாலையில் உள்ள செல்லுக்குடியில் உள்ள ஒருதிருமணமண்டபத்தில் கோலகலமாக நேற்று திருமணம் நடைபெற்றது. இதில் பல்வேறு அரசியல் கட்சியினர் பொதுமக்கள் ஊர் பெரியவர்கள் கலந்து கொண்டு அருண் பிரசாத் மற்றும் ஹனியா தம்பதிகளை வாழ்த்தினார்கள்.

### தரமற்ற முறையில் கட்டப்பட்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி

# 60 ஆயிரம் லிட்டர் குடிநீர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தொட்டி பயன்பாட்டிற்கு வந்த சில நாட்களிலேயே தண்ணீர் ஒழுகும் அவலம்

பொன்னமராவதி, ஜூலை.10–

60 ஆயிரம் லிட்டர் குடிநீர் கொள்ளளவு கொண்ட குடிநீர்தொட்டி பயன்பாட்டிற்கு வந்த சில நாட்களிலேயே தண்ணீர்ஒழுகும்வீடியோ சமூக வலைதளத்தில் பரவி வருகிறது, இது குறித்து சம்மந்தபட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி அருகேபகவண்டிப்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட பகுதியில் சுமார் 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர் இந்நிலையில் இப்பகுதி மக்களின் தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இருந்து வந்த பழைய நீர் தேக்க தொட்டி மிகவும் சிதளம் அடைந்ததாககூறி புதிதாக அமைக்கப்பட வேண்டுமென அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்த நிலையில் கடந்த 2021- 22 ஆம் ஆண்டின் JJM-P திட்டத்தின் கீழ் மாவட்ட ஊராட்சி நிதியின் சார்பாக சுமார் 11 லட்சம் மதிப்பீட்டில் 60,000 குடிநீர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டப்பட்டு திறக்கப்பட்டு தமிழக சட்டத்துறை அமைச்சர் ரகுபதியால் திறந்து வைத்து பயன்பாட்டிற்கு கொண்டு வந்த சில நாட்களிலேயே மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் நீர் கசிவு ஏற்பட்ட நிலையில் குடிதண்ணீர் வீணாக கீழே கொட்டும் காட்சி சமூக வலைதளத்தில் வெளியாகி பரபரப்பைஏற்படுத்தி உள்ளது.

சுமார் 11 லட்சம் மதிப்பிலான 60,000 லிட்டர் குடிநீர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த்தட்ட தொட்டியில் ஏற்பட்ட கசிவு போது மக்களிடையே அதிர்ச்சி ஏற்படுத்தி உள்ளது.



# ஆலங்குடி அரசுப்பள்ளியில் இயற்கை உணவு திருவிழா



ஆலங்குடி, ஜூலை. 10–

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அற்புதமாதா நடுநிலைப்பள்ளியில் மேரி இயற்கை உணவகம் மற்றும் கும்மங்குளம் அதிர்வு இளைஞர் நற்பணி மன்றம் இணைந்து நடத்திய ஆயிரம் வகையான பாரம்பரிய உணவுகளுடன் மெகா உணவு திருவிழா மற்றும் பாரம்பரிய மெகா விதை கண்காட்சி திருவிழா நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழ்நாடு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு பேசியது, உணவே மருந்து மீண்டும் உயிர் பெற தொடங்கியிருக்கிறது.

நாம் உண்ணுகின்ற உணவு பெரும்பாலும் விஷம் கலந்திருக்கிறது. விஷம் கலந்த உணவை உண்ணாமல் இயற்கையான உணவை பற்றி கூறுவது தான் இந்த விழாவின் நோக்கமாக நான் பார்க்கிறேன். குறிப்பாக முதலமைச்சர் சென்னையில் கருத்தரங்கை தொடங்கி வைத்து சிறுதானியம் காய்கறி பற்றி பல்வேறு விளக்கங்கள் கொடுத்து உரையாற்றி இருக்கிறார். ஆலங்குடியில் விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையில் இந்த உணவு திருவிழாவை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

நிலத்தின் தன்மை இயற்கை விவசாயத்திற்கு தற்போது ஒத்துவருவது இல்லை, மூன்றாண்டுகள் தொடர்ச்சியாக சாகுபடி செய்தால் நிலத்தின் தன்மை மாறும் 40 வயதுக்குள் உணவு முறை எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். 40 வயதை கடந்த உடன் உணவுப் பழக்கத்தை மாற்ற வேண்டும், இப்பொழுது உள்ள உணவுப்பொருட்கள் காய்கறிகளில் விஷம் கலந்திருக்கிறது, நமது உடம்பை கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ள வேண்டுமானால் விளையாட்டு, பாரம்பரிய உணவு கடைபிடிப்பவர்கள் மருத்துவமனைக்கு செல்ல தேவையில்லை என பேசினார், இந்நிகழ்வில் கும்மங்குளம் ஜோசப் ராயர் வரவேற்புரையாற்றினார்.

தங்கசண்முகசுந்தரம், ஆலங்குடி பங்குத்தந்தை ஆர் கே சாமி, தொழிலதிபர் சேசு உடையார், மரம் தங்க கண்ணன், சிட்டி பொபைல் லெட்சுமி நாராயணன், கார்த்திகேயன், கருப்பையா, மைக்கேல் அமல்தாஸ், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் எம்.அந்தோணிசாமி மற்றும் பொதுமக்கள் மாணவ, மாணவியர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# விலைவாசி உயர்வால் மக்கள் படும் துயரம் புதுச்சேரி முதல்வருக்கு தெரிவதில்லை வைத்திலிங்கம் குற்றச்சாட்டு



புதுச்சேரி , ஜூலை.10–

விலைவாசி உயர்வால் புதுச்சேரி மக்கள் படும் துயரங்கள், ஏ.சி. காரில் வலம்வரும் முதல்வருக்கும் அமைச்சர்களுக்கும் தெரிவதில்லை என்று மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி குற்றம் சாட்டி உள்ளார்.

விலைவாசி உயர்வைக் கண்டித்து புதுச்சேரி மாநில இளைஞர் காங்கிரஸ் சார்பில் ராஜா திரையரங்கம் அருகே நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இளைஞர் காங்கிரஸ் மாநில தலைவர் ஆனந்தபாபு நடராஜன் தலைமையில்நடைபெற்றஇந்த ஆர்ப்பாட்டத்தில், முன்னாள் முதல்வர் நாராயணசாமி, மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி, வைத்தியநாதன் எம்எல்ஏ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதில் காய்கறிகளுக்கும், சிலிண்டருக்கும் மாலை அணிவித்து அஞ்சலி செய்து நூதன போராட்டம் நடத்தப்பட்டது. அதோடு, தற்போதுபுதுச்சேரிதுணைநிலை ஆளுநராக இருக்கும் தமிழிசை சவுந்தரராஜன், சில வருடங்களுக்கு முன்பு விலை ஏற்றம் குறித்து பேசிய ஆடியோ ஒலிபரப்பப்பட்டது. அதில், "டீசல் விலை திடுக்கிட வைக்கிறது. பெட்ரோல் விலை பயமுறுத்துகிறது. கியாஸ் விலை கவலைப்பட வைக்கிறது. மண்ணெண்ணை விலையோ மரண அடி கொடுக்கிறது" என்று தமிழிசை பேசி உள்ளார்.

போராட்டத்தின் இடையே செய்தியாளர்களிடம் பேசிய வைத்திலிங்கம் எம்.பி, "விலைவாசிஉயர்வுகடுமையாக இருக்கிறது. ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் பேசிய ஆடியோக்களை கேட்டிருப்பீர்கள். தக்காளி விலை உயர்வு சொல்ல முடியாத அளவுக்கு உள்ளது. எல்லா காய்கறிகளின் விலைகளும் உயர்ந்துள்ளன. மட்டனை விட காய்கறி விலை அதிகமாக உள்ளது. காய்கறி இல்லாமல் எப்படி சமைக்க முடியும்? விலைவாசி உயர்வு குறித்து இந்த அரசு எதுவும் பேச மறுக்கிறது. புதுச்சேரி வந்த மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனும் விலைவாசி உயர்வு குறித்து பேசவில்லை. முதல்வர் ரங்கசாமி, மத்திய நிதி அமைச்சரிடம் புதுச்சேரிக்கு எந்த திட்டத்தையும் கேட்கவில்லை.

கடல் அரிப்புக்கு எந்த திட்டமும் இந்த அரசிடம் இல்லை. பொதுப்பணித் துறையில் வரைபடம் போடக் கூட ஆள் இல்லை. புதுச்சேரியில் மின்வெட்டு இல்லாத நாளே இல்லை. இது அரசாங்கத்துக்கு தெரியவில்லை. ஏ.சி. காரிலேயே ஆட்சியாளர்கள் செல்வதால் மக்கள் கஷ்டம் அவர்களுக்கு தெரிவதில்லை. அதிலும் மிக பெரிய கார் வைத்துள்ளார்கள். அதில் ஒரு வீட்டில் உள்ள அனைத்து வசதிகளும் உள்ளன. முதல்வர், அமைச்சர்கள் கார் கண்ணாடியைக் கூட கீழே இறக்குவது இல்லை. இதனால் மக்கள் பிரச்சினைகள் அவர்களுக்குத் தெரிவதில்லை. இவர்களை விட ஆளுநர் மிக மோசம். மதுக்கடைகள், சாராயக் கடைகளை மட்டுமே திறந்து வருகிறார். ஏனாமில் சூதாட்ட கிளப்புகளை திறக்கிறார். மக்கள் வெளியில் வந்து போராட்டம் நடத்தினால்தான் இதற்கு விடியல் வரும் என்ற காரணத்தினால் தான் இளைஞர் காங்கிரஸ் போராட்டம் நடத்தியது. மாநில அரசாங்கத்தை கண்டித்து காங்கிரஸ் தொடர்ந்து போராட்டங்களை நடத்தும்" என்று தெரிவித்தார்.

# கோவையில் குளங்களை சூழ்ந்த 'பச்சை பசேல்' ஆபத்து ஆகாயத்தாமரை பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைப்பது யார்?



கோவை , ஜூலை.10–

கோவை மாவட்டத்தில் 25-க்கும் மேற்பட்ட நீர்நிலைகள் இருந்தாலும், மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 9 நீர்நிலைகளே உள்ளன. இவை நொய்யல் ஆற்றை நீராதாரமாக கொண்டுள்ளன. மாநகரில் நிலத்தடி நீர்மட்ட உயர்வுக்கு இக்குளங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

மாநகரிலுள்ள மழைநீர் வடிகால்கள், இக்குளங்களில் வந்து கலக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்த குளங்கள், பராமரிப்பின்றி தற்போது மாசடைந்து காணப்படுகின்றன.

இது தொடர்பாக சமூக செயற்பாட்டாளர் பி.ராஜ்குமார் கூறியதாவது: கோவை மாநகரில் உள்ள வாலாங்குளம், குறிச்சிகுளம், பெரியகுளம் உள்ளிட்ட குளங்களின் கரைப்பகுதிகளில் மாநகராட்சி சார்பில் 'ஸ்மார்ட் சிட்டி' திட்டத்தின் கீழ் பல கோடி ரூபாய் மதிப்பில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. குளக்கரைகள் பலப்படுத்தப்பட்டு பல்வேறு பொழுதுபோக்கு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இது வரவேற்கத்தக்கது. அதேசமயம், குளத்துக்குள் கழிவுநீர் கலப்பதை தடுக்கவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். குளங்களை சுற்றியுள்ள குடியிருப்புகள், வணிக நிறுவனங்களில் இருந்து வெளியேறும் கழிவுநீரும், மழைநீரும் நேரடியாக குளங்களில் கலக்கிறது. கழிவுநீர் கலப்பதால் குளங்களில் ஆகாயத்தாமரை படர்ந்து, நீர்நிலைகள் மாசடைகின்றன.

ஆகாயத்தாமரையை அகற்ற மாநகராட்சி நிர்வாகத்தினர் மேற்கொண்ட முயற்சிகள் முழு பலனளிக்கவில்லை. அவ்வப்போது பெயரளவில் மட்டும் ஆகாயத்தாமரை அகற்றப்படுகிறது. மாநகரில் ஒருங்கிணைக்கப்பட்ட 60 வார்டுகளின் சில பகுதிகளில் மட்டுமே பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் உள்ள அனைத்துவகைகட்டிடங்களில் இருந்துவெளியேறும் கழிவுநீர் நேரடியாக சுத்திகரிப்பு நிலையத்துக்கு சென்று, சுத்திகரிப்பு செய்யப்படுகிறது.

உக்கடத்தில் உள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் மட்டுமே தற்போது பயன்பாட்டில் உள்ளது. ஒண்டிப்புதூர் கழிவுநீர் சுத்திகரிப்பு மையம் முழு பயன்பாட்டில் இல்லை. பாதாள சாக்கடை வீட்டு இணைப்புகளை விரைவாக முடித்து, கழிவுநீர் குளத்துக்குள் கலப்பதை முழுமையாக தடுக்க வேண்டும். தவிர, கழிவுநீர் கலப்பை தடுக்க, குளங்களில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கவும் மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

இது குறித்து மாநகராட்சி ஆணையர் மு.பிரதாப் கூறியதாவது: மாநகரில் உள்ள குளங்களில் நீர்நிலையை பாதுகாக்க கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதன் மூலம் குளத்துக்கு வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, குளத்துக்குள் விடப்படுகிறது. வாலாங்குளம் மற்றும் பெரியகுளத்தின் கரைப்பகுதிகளில் தலா 2 எம்.எல்.டி. சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளன.

வாலாங்குளத்தில் கூடுதலாக ஒரு சுத்திகரிப்பு நிலையம், கிருஷ்ணாம்பதி குளம், சிங்காநல்லூர் குளம் ஆகியவற்றில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. தவிர, முத்தண்ணன் குளத்தின் கரையிலும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பயாலஜிக்கல் மற்றும் கெமிக்கல் ஆக்சிஜன் டிமாண்ட் என இரு வகைகளில் நீரின் தரம் ஆய்வு செய்யப்படுகிறது.

கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்ட குளங்களில், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் முன்னர் நீரின் தன்மை எவ்வாறு இருந்தது, அதன்பின் சுத்திகரிப்பு செய்த தண்ணீர் வந்த பின்னர் எவ்வாறு உள்ளது என்பன குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்ட குளங்களில் நீர் மாசுபாடும், பாக்டீரியாக்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளன.

மற்றொரு புறம் எந்தெந்த ஏரியாக்களில் பாதாள சாக்கடைத் திட்டக் குழாய் உள்ளது, அதில் எவ்வளவு வீடுகள் இணைக்கப்பட்டுள்ளன என்பதை கணக்கெடுத்து வருகிறோம். அதனடிப்படையில் குளத்துக்குள் கழிவுநீர் கலக்கும் வகையிலான குழாய்களை கண்டறிந்து துண்டித்து வருகிறோம், என்றார்.




# ஆவுடையார்கோவில் அருகே அமரடக்கி மற்றும் மாவடிகோட்டை கிராமங்களில் கும்பாபிஷேக விழா



ஆவுடையார்கோவில், ஜூலை.10–

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா அமரடக்கி கிராமத்தில் புகழ்பெற்ற ஸ்ரீ முத்துமாரி அம்மன் திருக்கோயில் உள்ளது

இக்கோயில் கும்பாபிஷேகம் செய்வதென அப்பகுதி கிராமத்தார்களால் முடிவு செய்யப்பட்டு கோவில் புனரமைப்பு பணிகள் நடைபெற்று முடிந்தது.

கும்பாபிஷேகத்திற்காக கடந்த 7 ஆம் தேதி முதல் கால யாகபூஜை கணபதி ஹோமத்துடன் தொடங்கி நடைபெற்று வந்த நிலையில் திருக்கோவிலில் நேற்று நான்காம் கால யாகபூஜைகள் நிறைவுபெற்று தொடர்ந்து கடம்புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது. கடம் புறப்பாடானது கோவிலைச் சுற்றி வலம் வந்த பின்னர் கோபுர கலசத்தை அடைந்தது , சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க கருட பகவான் வானத்தில் வட்டமிட மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்த கும்பாபிஷேகத்தில் அறந்தாங்கி ஆவுடையார்கோவில் மீமிசல் அமரடக்கி உள்ளிட்ட சுற்றுவட்டார பக்தர்கள் ஆன்மீக மெய்யன்பர்கள் பொதுமக்கள் திரளானோர் கலந்து கொண்டு கோபுர தரிசனம் செய்தனர். கும்பாபிஷேக நிகழ்ச்சிக்கு பிறகு ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது, இந்த நிகழ்வில் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி ராமச்சந்திரன் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தார், கும்பாபிஷேக நிகழ்ச்சிகள் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது, ஆவுடையார்கோவில் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# ஆளுநர் மட்டுமல்ல நாட்டில் உள்ள அனைவரும் அரசியல் பேச வேண்டும் சீமான் அதிரடி



காரைக்குடி , ஜூலை.10–

ஆளுநர் மட்டுமல்ல நாட்டில் உள்ள அனைவருமே அரசியல் பேச வேண்டும் என சீமான் வலியுறுத்தியுள்ளார்.

காரைக்குடியில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: வரும் பாராளுமன்ற தேர்தலில் நாம் தமிழர் கட்சி தனித்து போட்டியிடும். வரும் காலங்களில் திராவிட கட்சிகள் தவிர மற்ற கட்சிகள் வந்தால் கூட்டணி குறித்து பேசலாம்.

மீனவர்கள் கைது குறித்து அண்ணாமலையிடம் தான் கேட்க வேண்டும். ஆளுநர் மட்டுமல்ல, இந்த நாட்டில் உள்ள அனைவரும் அரசியல் பேச வேண்டும். அண்ணாமலை பேச வேண்டியதெல்லாம் ஆளுநர் பேசி விடுவதால் அண்ணாமலைக்கு குழப்பம். மக்களால் தேர்வு செய்யப்பட்ட ராகுல் காந்தியை தகுதி நீக்கம் செய்ய நீங்கள் யார்? ராகுல் காந்தியை தகுதி நீக்கம் செய்தது மக்களாட்சிக்கு விரோதமானது. விஜய் அரசியலுக்கு வந்துவிடுவாரோ என்று சிலருக்கு பயம். இதற்கு முன்பாக மது குடிக்கும் காட்சிகளில் விஜய் நடித்தது இல்லையா? இவ்வாறு அவர் கூறினார்.

# வேப்பூர் அருகே வளையல் அணி விழாவிற்கு சென்ற வேன் கவிழ்ந்து 25–க்கும் மேற்பட்டோர் படுகாயம்



கள்ளக்குறிச்சி, ஜூலை,10_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கிளியூர் கிராமத்தை சேர்ந்த வெங்கடேசன் மகன் பந்தளராஜன் தனது மனைவி ஜோதிகாவின் வளையல் அணி விழாவிற்காக திருச்சி ஸ்ரீரங்கத்தில் உள்ள மனைவியின் தாய் வீட்டிற்கு தனது உறவினர்களை மகேந்திரா வேனில் அழைத்துக் கொண்டு, நேற்று கிளியூரிலிருந்து புறப்பட்டு திருச்சி நோக்கி சென்று கொண்டிருந்த போது கடலூர் மாவட்டம், வேப்பூர் அருகே தேசிய நெடுஞ்சாலையில் எதிர்பாராத விதமாக டயர் வெடித்து ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து தலைகீழாக விழுந்து ஏற்பட்ட விபத்தில் சுமார் 25-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.

இத்தகவலறிந்த வேப்பூர் காவல் நிலைய காவல்துறையினர் மற்றும் பொதுமக்கள் படுகாயம் அடைந்தவர்களை ஆம்புலன்ஸ் மூலம் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனைக்கும் அனுப்பி வைத்தனர், அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

# ஈரோடு – ஜோலார்பேட்டை ரயில் நாளை ரத்து செய்யப்படுகிறது



சேலம் , ஜூலை.10–

சேலம் வழியாக இரு மார்க்கத்திலும் இயக்கப்பட்டு வரும் ஈரோடு- ஜோலார்பேட்டை இடையிலான பயணிகள் ரயில், 11-ம் தேதி ரத்து செய்யப்படுகிறது.

இதேபோல், கோவை - சென்னை சென்ட்ரல் இடையிலான இன்டர்சிட்டி விரைவு ரயிலும் கோவை - காட்பாடி வரை மட்டுமே வரும் 11, 18, 25, ஆகஸ்ட் 1 ஆகிய 4 நாட்களுக்கு இயக்கப்படும் என்று சேலம் ரயில்வே கோட்டம் அறிவித்துள்ளது.

சேலம் வழியாக, ஈரோடு- ஜோலார்பேட்டை இடையே இரு மார்க்கத்திலும் பயணிகள் ரயில் தினமும் இயக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், ஜோலார்பேட்டை ரயில் நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், ஈரோட்டில், காலை 6.25 மணிக்கு புறப்பட்டு, ஜோலார்பேட்டைக்கு நண்பகல் 12.10 மணிக்கு சென்றடையும் ஈரோடு- ஜோலார்பேட்டை பயணிகள் ரயிலானது,11-ம் தேதி முழுமையாக ரத்து செய்யப்படுகிறது. மறு மார்க்கத்தில், ஜோலார்பேட்டையில் மாலை 3.10 மணிக்குப் புறப்பட்டு, ஈரோட்டுக்கு இரவு 7.45 மணிக்கு வந்தடையும் ஜோலார்பேட்டை- ஈரோடு பயணிகள் ரயிலும், 11-ம் தேதி முழுமையாக ரத்து செய்யப்படுகிறது.

இதனிடையே, கோவை - சென்னை சென்ட்ரல் இன்டர்சிட்டி விரைவு ரயிலானது வரும் 11, 18, 25, ஆகஸ்ட் 1 ஆகிய தேதிகளில் காட்பாடி - சென்னை சென்ட்ரல் இடையே இயக்கப்பட மாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அரக்கோணம் - காட்பாடி இடையிலான ரயில் பாதையில், சித்தேரி ரயில் நிலையத்தில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, கோவையில் இருந்து காலை 6.20 மணிக்குப் புறப்படும் கோவை - சென்னை சென்ட்ரல் இன்டர்சிட்டி (எண்.12680) விரைவு ரயிலானது வரும் 11, 18, 25, ஆகஸ்ட் 1 ஆகிய தேதிகளில் கோவை - காட்பாடி வரை மட்டுமே இயக்கப்பட உள்ளது. காட்பாடி - சென்னை சென்ட்ரல் இடையே ரயில் இயக்கம் ரத்து செய்யப்படுகிறது.

மறு மார்க்கத்தில், சென்னை சென்ட்ரலில் இருந்து மதியம் 2.35 மணிக்கு புறப்பட வேண்டிய சென்னை சென்ட்ரல்- கோவை இன்டர்சிட்டி ( எண்.12679) விரைவு ரயிலானது, வரும் 11-ம் தேதி, 18, 25, ஆகஸ்ட் 1-ம் தேதி ஆகிய நாட்களில், சென்னை சென்ட்ரல் - காட்பாடி இடையே இயங்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாறாக, காட்பாடி - கோவை இடையே மட்டும் இயக்கப்படும் என்று சேலம் ரயில்வே கோட்டம் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை மழைநீர் வடிகால் பணிகளை ஆய்வு செய்த தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா



சென்னை , ஜூலை.10–

சென்னையில் பல்வேறு துறைகள் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகளை தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னையில் பல்வேறு சேவை துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், பாதாளச் சாக்கடை திட்டப் பணிகளை தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதன் விவரம்: சென்னை மாநகராட்சி, ஆலந்தூர் மண்டலம், வார்டு-156, முகலிவாக்கம், சபரிநகர் மற்றும் மதனந்தபுரம் பகுதிகளில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் ரூ,99.71 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வரும் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகளை விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், பணிகள் மேற்கொள்ளும் இடங்களில் தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளவும், பணிகள் முடிக்க முடிக்க அந்த பகுதிகளில் தரமான சாலைகளை நெடுஞ்சாலைத் துறையினர் உடனுக்குடன் அமைக்க வேண்டும் எனவும், சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, லலிதா நகர் 2வது தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் வெள்ளத் தடுப்பு நிவாரண நிதியின் கீழ், ரூ.3.49 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அங்குள்ள பொதுமக்களிடம் கலந்துரையாடினார். மேலும், இந்த மழைநீர் வடிகால் பணிகளை 15 நாட்களுக்குள் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் பணிகளை மேற்கொள்ளவும், பணிகள் முடிக்க முடிக்க அந்த பகுதிகளில் தரமான சாலைகளை நெடுஞ்சாலைத் துறையினர் உடனுக்குடன் அமைக்க வேண்டும் எனவும், அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், நீர்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள போரூர் ஏரியில் மாநகராட்சியின் சார்பில் மேற்கொள்ளப்பட உள்ள நடைபாதை அமைத்தல், கரைகளை பலப்படுத்துதல், ஏரியினை பசுமையாகப் பராமரிக்கும் வகையில் மரங்கள், செடிகள் நடுதல் போன்ற அழகுப்படுத்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், வளசரவாக்கம் மண்டலத்திற்குட்பட்ட போரூர் சந்திப்பில் நெடுஞ்சாலைத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் ஆகியவற்றின் சார்பில் மேற்கொள்ளப்பட உள்ள மழைநீர் வடிகால் மற்றும் பாதாளச் சாக்கடை திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, வார்டு-156க்குட்பட்ட போரூரில் உள்ள நகர்ப்புர வீடற்றோர் காப்பகத்தில் தன்னார்வ அமைப்பு மூலம் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அங்குள்ள சமையல் கூடத்தினைப் பார்வையிட்டு அவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், அங்குள்ள குழந்தைகளால் பராமரிக்கப்படும் மாடித் தோட்டத்தினைப் பார்வையிட்டு குழந்தைகளைப் பாராட்டினார். குழந்தைகளுடன் கலந்துரையாடி கல்விதான் மிகவும் முக்கியம் என்று கூறி, நன்கு படிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார். காப்பகத்தினை சுத்தமாகவும், தூய்மையாகவும் பராமரிக்க வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ச்சியாக, ராமாபுரம், திருவள்ளூர் சாலையில் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் வெள்ளத் தடுப்பு நிவாரண நிதியின் கீழ் ரூ.20 கோடி மதிப்பீட்டில் 2,960 மீ. நீளத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இவற்றில் 1,706 மீ. நீளமுள்ள மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,254 மீ. நீளமுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்விடத்தில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் குடிநீர் குழாய் பதிக்கும் பணிகளும் நடைபெற்று வருவதால், நெடுஞ்சாலைத் துறையுடன் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியமும் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொண்டு விரைந்து முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவும், பணிகள் முடிக்க முடிக்க அந்த பகுதிகளில் தரமான சாலைகளை நெடுஞ்சாலைத் துறையினர் உடனுக்குடன் அமைக்க வேண்டும் எனவும், அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், அடையாறு மண்டலத்திற்குட்பட்ட கோட்டூர்புரம், ரிவர் வியூ சாலையில் தனியார் பங்களிப்புடன் பராமரிக்கப்பட்டு வரும் மாநகராட்சி நகர்வனப் பூங்காவினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பூங்காவில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகளை நல்ல முறையில் தொடர்ந்து பராமரிக்கவும், கூடுதலாக மரக்கன்றுகள் மற்றும் செடிகளை நட்டு பசுமையாகப் பராமரிக்கவும், பூங்காவை சுத்தமாகவும், தூய்மையாகவும் பராமரிக்கவும் அறிவுறுத்தினார்.

# 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த வடமதுரை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி திருக்கோவிலின் மகா கும்பாபிஷேகம்





ஊத்துக்கோட்டை, ஜூலை10-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், வடமதுரை ஊராட்சியில் காந்தி சிலை அருகே பிரசித்தி பெற்ற ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் ஒன்று உள்ளது.நூறு ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்கோவில் சிதிலமடைந்து காணப்பட்டது.

இதனை புனரமைத்து நேற்று காலை 10 மணிக்கு மகா கும்பாபிஷேகம் செய்து வைத்தனர்.இதை முன்னிட்டு வியாழக்கிழமை முதல் சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. நேற்று காலை நான்காம் கால யாக பூஜைகள்,யாத்ரா தானம், மகா பூர்ணாகுதி உள்ளிட்டவை நடைபெற்றது.

இதன் பின்னர், திருவண்ணாமலை மாவட்டம், ஆரணியைச் சேர்ந்த வைத்தியநாத குருக்கள் தலைமையில் 10 பேர் கொண்ட வேத விற்பனர்கள் புனித நீர் அடங்கிய கலசங்களை ஊர்வலமாக கொண்டு சென்றனர். காலை 10 மணிக்கு கோபுர கலசங்கள்,விநாயகர்,முருகர், மூலவர் உள்ளிட்டவைகளுக்கு புனித நீரை ஊற்றி மகா கும்பாபிஷேகம் செய்தனர்.

இதைத்தொடர்ந்து மகா அலங்காரம்,மகா தீபாராதனையும், தீர்த்தம்-பிரசாதம் வினியோகம் நடைபெற்றது. பின்னர், கோவில் வளாகத்தில் அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. இதன் பின்னர்,கோவில் வளாகத்தில் கலை நிகழ்ச்சிகளும், ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி விசேஷ அலங்காரத்துடன் கல்யாண உற்சவம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் டி.ஜே.கோவிந்தராஜன், எல்லாபுரம் ஒன்றிய திமுக செயலாளர் பி.ஜே.மூர்த்தி, எல்லாபுரம் ஒன்றிய அதிமுக செயலாளர் எம்.மகேந்திரன், எல்லாபுரம் ஒன்றிய பெருந்தலைவர் வடமதுரை கே.ரமேஷ்,திருவள்ளூர் மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர் அம்மினிமகேந்திரன், எல்லாபுரம் ஒன்றிய குழு உறுப்பினர் ஜமுனா அப்புன்,வடமதுரை ஊராட்சி மன்ற தலைவர் காயத்ரி கோதண்டன்,ஊராட்சி மன்றத்துணைத்தலைவர் பாக்கியலட்சுமிரமேஷ் மற்றும் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோவிலின் பரம்பரை தர்மகர்த்தா தியாகராஜன் முதலியார் தலைமையில் மணி குருக்கள், சம்பத் குருக்கள்,குமரேசன் மற்றும் விழா குழுவினர்கள்,பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர். இன்று முதல் 48 நாட்கள் மண்டல அபிஷேக நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது.

# அரசு மருத்துவமனை பெண் டாக்டரை மிரட்டி, தாலி சங்கிலியை பறித்து சென்ற நபர்கள்

செங்கல்பட்டு, ஜூலை,10

செங்கல்பட்டு, அண்ணாநகரை சேர்ந்தவர் மாலினி (43). இவரது கணவர் ஹரிகுமார் (47). இத்தம்பதி,செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் டாக்டர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்றிரவு வேலை முடிந்து இத்தம்பதி வீடு திரும்பியுள்ளனர். பின்னர் இரவு உணவு சாப்பிட்டு, வீட்டு கதவுகளை உள்பக்கமாக பூட்டிக்கொண்டு, அறைக்குள் இருவரும் தூங்கியுள்ளனர். இதைத் தொடர்ந்து, நேற்று முன் தினம் நள்ளிரவு வீட்டின் உள்பக்கமாக பூட்டியிருந்த முன்பக்க கதவை உடைத்து, டாக்டர் தம்பதியின் வீட்டுக்குள் மர்மநபர்கள் புகுந்துள்ளனர்.

வீட்டுக்குள் மர்ம நபர்களின் நடமாட்டத்தை அறிந்து டாக்டர் தம்பதிகள் அலறியடித்து எழுந்துள்ளனர். பின்னர் டாக்டர் மாலினிக்கு மர்ம நபர்கள் கொலை மிரட்டல் விடுத்தனர். மேலும், அவரது கழுத்தில் இருந்த 12 சவரன் சங்கிலியைப் பறித்துக் கொண்டு தப்பி சென்றனர். இதுகுறித்து தகவலறிந்ததும் செங்கல்பட்டு நகர போலீசார் விரைந்து வந்தனர். அங்கு அப்பகுதி சிசிடிவி காமிரா பதிவுகளை ஆய்வு செய்து தீவிரமாக விசாரித்தனர். இப்புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து, பெண் டாக்டரை மிரட்டி தங்க சங்கிலி பறித்து சென்ற மர்ம நபர்களை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

# வீட்டு வாசலில் காலனி விடுவதில் ஏற்பட்ட தகராறில் மாடியில் இருந்து கீழே தள்ளி விட்ட பெண் உயிர் இழப்பு

சென்னை,ஜூலை,10

சென்னை திருவொற்றியூர் தியாகராயபுரம் பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பில் வசித்து வருபவர் புஷ்பகாந்த் இவரது மனைவி 40 வயதுடைய வசந்தி வாடகை வீட்டில் வசித்து வருகிறார். இவரது எதிர் வீட்டில் வசித்து வரும் குமார் என்பவர் கடந்த ஒன்றாம் தேதி குடிப்போதையில் இரவு வீட்டிற்க்கு வந்துள்ளார்

அப்போது எதிர்வீட்டில் வசிக்கும் வசந்தி என்பவரிடம் வீட்டு வாசலில் காலனி விடுவதில் தகராறில் ஈடுபட்டுள்ளார்.



வாய் சண்டை முற்றவே ஆத்திரத்தில் குமார் வசந்தியை முதுகு பகுதியில் தள்ளியதில் இதில் நிலை தடுமாறி இரண்டாவது மாடியில் இருந்த வென்டிலேஷன் வழியாக கீழே வசந்தி கீழே விழுந்துள்ளார்.

இதில் கீழ் தளத்தில் விழுந்த வசந்திக்கு தலையிலும் வயிற்றுபகுதியில் பலத்த காயம் ஏற்பட்டதால் அருகில் இருந்தவர்கள் உடனடியாக அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுமதித்தனர் . இச்சம்பவம் குறித்து திருவொற்றியூர் போலீசார் வழக்கு பதிவு செய்து குமாரை கைது செய்து சிறையில் அடைத்தனர் .

மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று வந்த வசந்தி சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் இரவு உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்து திருவொற்றியூர் போலீசார் கொலை வழக்கு பதிவுசெய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆரணியில் மோட்டார் சைக்கிளில் மதுபானம் கடத்தி வந்தவர் கைது

ஊத்துக்கோட்டை , ஜூலை10-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி காவல் நிலைய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பாஸ்கர் தலைமையில் போலீசார் நேற்று மதியம் ரோந்து பணி மேற்கொண்டனர். அப்பொழுது ஜி.என். செட்டி தெருவில் மோட்டார் சைக்கிளில் வந்த ஒரு வாலிபரை வழிமறித்து



சோதனை செய்தனர்.

அப்போது அரசு மதுபான பாட்டில்களை அவர் கடத்தி வந்ததை கண்டுபிடித்தனர். எனவே, மோட்டார் சைக்கிளுடன் மது பாட்டில்களை போலீசார் பறிமுதல் செய்து காவல் நிலையம் கொண்டு வந்தனர். விசாரணையில் அவர் ஆரணி சுப்பிரமணிய நகரை சேர்ந்த முத்து(வயது34) என்பது தெரிய வந்தது.எனவே, போலீசார் குற்றவாளி மீது வழக்கு பதிவு செய்து பொன்னேரி முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

### திருப்பரங்குன்றம் அருகே புதிய அங்கன்வாடி மையத்தை

# அகற்றக் கூடாது என 200 –க்கும் மேற்பட்டோர் குழந்தைகளுடன் போராட்டம்



மதுரை, ஜூலை.10-

மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் அருகே தனக்கன்குளம் ஊராட்சியில் உள்ள எம்ஜிஆர் காலனியில் ரூபாய் 12 லட்சம் செலவில் புதிய அங்கன்வாடி மையம் கட்டி முடிக்கப்பட்டு, குழந்தைகள் கல்வி பயின்று வரும் நிலையில், அப்பகுதியில் உள்ள தனிநபர் புதிய அங்கன்வாடி மையம் கட்டிய இடம் நீரோடை பகுதி எனக் கூறி, நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

இதனை தொடர்ந்து, நீரோடை பகுதியில் ஆக்கிரமித்துகட்டியபுதிய அங்கன்வாடி மையத்தை அகற்ற நீதிமன்றம் உத்தரவிட்டது. இதன் அடிப்படையில், எம்ஜிஆர் காலனி பகுதியில் உள்ள 200க்கும் மேற்பட்ட மக்கள் , அங்கன்வாடி மையத்தின் முன்பு கை குழந்தைகளுடன் அமர்ந்து, தங்களது குழந்தைகள் பயன்பெறக்கூடிய இம்மையம் நீரோடை பகுதியில் அமைக்கப்பட்டது அல்ல , தனிநபர் சுயநலம் கருதி அதனை அகற்ற நீதிமன்றத்திற்கு வழக்கு கொடுத்துள்ளார் .

நீதிமன்றம் ஆய்வு குழு அமைத்து, மறுபரிசீலனை செய்து புதிய அங்கன்வாடி மையக் கட்டிடத்தை நிரந்தரமாக அதே இடத்தில் அமைத்து பிஞ்சு குழந்தைகளுக்கு பாதுகாப்பாகவும், அவர்களுக்கு கல்வி கற்பிக்கின்ற கட்டிடமாகவும் அமைய அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளனர்.மேலும் இப்பகுதியில் இலங்கை மக்கள் (புலம்பெயர்ந்த ) குடும்பங்களை சார்ந்த குழந்தைகள் பெரும்பாலானோர் இம்மைய கட்டிடத்தில் கல்வி பயின்று வருகின்றனர்என்பது குறிப்பிடத்தக்கது

# குட்கா வேட்டையில் 9 லட்சம் மதிப்புள்ள 2 டன் குட்காவை போலீசார் பறிமுதல் செய்தனர் இருவர் கைது

திருவொற்றியூர், ஜூலை,10

சென்னை திருவொற்றியூர் கான் கார்டு பகுதியில் சோதனை சாவடியில் திருவொற்றியூர் காவல் ஆய்வாளர் காதர் மீரான் தலைமையில் போலீசார் வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டு இருந்தனர் அப்போது தண்டையார் பேட்டையில் இருந்து அவ்வழியாக வந்த ஆட்டோ சந்தேகத்தின் பேரில் மடக்கி நிறுத்தி சோதனை செய்தபொழுது 5மூட்டைகள் இருப்பதைப் பார்த்த போலிசார் அவற்றைசோதனைசெய்து பார்த்த போது தமிழக அரசுதடைசெய்யப்பட்ட குட்கா பொருள் இருப்பது தெரியவந்தது ஆட்டோவில் இருந்த இருவரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை செய்த போது





சென்னை வியாசர்பாடி சாலைமா நகர் பகுதியைச் சேர்ந்த சதிஷ் குமார், சர்மா நகர் BV காலனி பகுதியைச் சேர்ந்த நாகராஜன் என தெரியவந்து அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் ஆய்வாளர் காதர் மீரான் தனிப்படை காவலர்கள் சரவணன், மதன், நகுலன் கார்த்திக் ஆகியோர் ஓட்டேரி பாஷியம்ரெட்டி தெருவில் உள்ள இரண்டாவது மாடியில் வீட்டை திறந்து பார்த்த போது மூட்டை மூட்டையாக குட்காவை இருப்பது தெரியவந்தது

வீட்டில் இருந்த 9 லட்சம் 50.ஆயிரம் மதிப்புள்ள சுமார் 2000 கிலோ குட்காவை பறிமுதல் செய்தனர். குட்காவை பெங்களூரில் இருந்து வாங்கி வந்து சென்னையில் பல்வேறு பகுதிகளில் விற்பனை செய்வதும் தெரியவந்தது அவர்களிடம் இருந்து மூன்று செல்போன்கள் ஒரு ஆட்டோ பறிமுதல் செய்த போலீசார் குட்கா வைத்து விற்பனையில் ஈடுபட்ட நாகராஜ், சதிஷ் குமார் ஆகிய இருவர் மீதும் போலீசார் வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி இருவரையும் சிறையில் அடைத்தனர்.

நேற்று 600 கிலோ குட்காவை போலீசார் பறிமுதல் செய்து இருவரை கைது செய்து சிறையில் அடைத்தது குறிப்பிடத்தக்கது

# வேளச்சேரி, ஸ்ரீ சௌந்தர நாராயண பெருமாள் ஆலய கும்பாபிஷேக விழா

சென்னை , ஜூலை.10-

சென்னை, வேளச்சேரி, பிள்ளையார் கோவில் தெருவில் கோவில் கொண்டிருக்கும் அருள்மிகு வேதஸ்ரேணி ஸ்ரீ சௌந்தர நாராயண பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேகம் 12 ஆண்டுகளுக்கு பிறகு, நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம், ஆனி மாதம் துவாதசி திதி, திருவோண நட்சத்திரம் கூடிய சுபயோக சுப தினத்தில் சிம்மலக்னத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.



ஸ்ரீபாஞ்சராத்ர, ஆகம வைணவ முறைப்படி வேத-பிரபந்த சாற்று முறையுடன் மிக விமரிசையாக நடைபெற்ற இந்த கும்பாபிஷேக விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் இன்வெண்டா குழும நிறுவனத்தின் தலைவர் வி.ரவிச்சந்திரன், அவரது துணைவியார் பாலசந்தி இரவிச்சந்திரன் மற்றும் கும்பாபிஷேக விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

# அதிமுகவின் மதுரை மாநாட்டுக்கான கால்கோள் விழா மூத்த நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள் பங்கேற்பு

மதுரை , ஜூலை.10-

வரும் ஆகஸ்ட் 20ம் தேதி மதுரையில் நடைபெற உள்ள அதிமுக மாநாட்டிற்கான கால்கோள் விழா நேற்று நடைபெற்றது. இதில், கட்சியின் மூத்த நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

அதிமுக பொதுச்செயலாளராக கே.பழனிசாமி பொறுப்பேற்ற பிறகு அக்கட்சியின் முதல் மாநில மாநாடு மதுரை ரிங் ரோட்டில் உள்ள கருப்பசாமி கோயில் எதிரே உள்ள திடலில் ஆகஸ்ட் 20ஆம் தேதி நடக்கிறது. இதற்கான கால்கோள் விழா பூஜை நேற்று அதிகாலை பிரம்ம முகூர்த்தத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் கே.ராஜு, ஆர்.பி.உதயகுமார், அமைப்புச் செயலாளர் வி.வி. ராஜன் செல்லப்பா ஆகியோர் செய்திருந்தனர்.



நிகழ்ச்சியில் கே.பி. முனுசாமி பேசுகையில், ”அதிமுக மாநாட்டில் மதுரை மாவட்டத்தில் இருந்து மட்டும் 3 லட்சம் பேர் கலந்துகொள்ள வேண்டும். இந்த மாநாட்டிற்குப் பிறகு திமுகவை தவிர மற்ற கட்சிகள், அதிமுக பொதுச்செயலாளர் கே.பழனிசாமியின் தலைமையிலான கூட்டணிக்கு வருவார்கள். இந்த மாநாடு அன்று அதிமுக தொண்டர்கள் யாரும் வீட்டில் இருக்கக்கூடாது. குடும்பத்துடன் மாநாட்டில் பங்கேற்று கட்சிக்கு பலமும், பெருமையும் சேர்க்க வேண்டும். இந்த மாநாட்டின் தாக்கம் மக்களைவைத் தேர்தலில் அதிமுகவிற்கு மிகப்பெரிய வெற்றியை தேடிக் கொடுக்கும்” எனத் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் ஆர்பி.உதயகுமார் பேசுகையில்,”கட்சித் தலைமை மாநாட்டை மதுரையில் நடத்த முடிவெடுத்தது நமக்கும், மதுரைக்கும் கிடைத்த பெருமை. இதற்கு முன் எம்ஜிஆர், ஜெயலலிதா இதுபோல் மாநாடுகளை நடத்துவதற்கு மதுரையை தேர்ந்தெடுத்துள்ளார்கள். அவர்களை போல் கே.பழனிசாமி நம் மீது நம்பிக்கை வைத்து இந்த முடிவெடுத்துள்ளார். அந்த நம்பிக்கையை காப்பாற்றி, மாநாட்டை வெற்றிப்பெற செய்ய வேண்டும்'' என வலியுறுத்தினார்.

முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜு பேசுகையில், ''மதுரை எப்போதுமே அதிமுக கோட்டை. அதிமுகவிற்கு திருப்பம் தரக்கூடிய மாவட்டம். அதனால் கட்சியை தொடங்கிய எம்ஜிஆர், கட்சியை கட்டி காப்பாற்றிய ஜெயலலிதா முதல் தற்போது கே.பழனிசாமி வரை கட்சியின் மிகப்பெரிய மாநாடுகளை, நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு மதுரையை தேர்வு செய்துள்ளார்” என்றார்.

முன்னாள் மேயர் ராஜன் செல்லப்பா பேசுகையில், ”மதுரையில் எத்தனையோ கட்சி நிகழ்ச்சிகள், மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. இதுபோன்ற மாநாடு பார்த்ததில்லை என்று சொல்கிற அளவிற்கு மாநாட்டை வெற்றிப்பெறச் செய்ய வேண்டும்,” என்றார்.

அவைத் தலைவர் தமிழ் மகன் உசேன், பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன், அமைப்பு செயலாளர்கள் முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன், நத்தம் விசுவநாதன், தலைமை நிலைய செயலாளர் எஸ்.பி.வேலுமணி, முன்னாள் அமைச்சர்கள் பி.தங்கமணி, சி.வி.சண்முகம், கொள்கை பரப்புச் செயலாளர் தம்பிதுரை, முன்னாள் அமைச்சர்கள் டி.ஜெயக்குமார், ஓ.எஸ். மணியன், பொள்ளாச்சி ஜெயராமன், டாக்டர் விஜயபாஸ்கர், காமராஜ், கரூர் விஜயபாஸ்கர், வளர்மதி, சி.பொன்னையன், வைகைசெல்வன், மாவட்ட வழக்கறிஞர் அணி ரமேஷ், மதுரை மண்டல தகவல் தொழில்நுட்பபிரிவுசெயலாளர் வி.வி.ஆர்.ராஜ்சத்யன் மற்றும் நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். கால்கோள் விழாவுக்குப் பிறகு நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டு மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவது பற்றி ஆலோசனை மேற்கொண்டனர்.

# தரங்கம்பாடியில் சீகன்பால்கு 317 வது நினைவு தினம் அனுசரிப்பு 1000 பேர் பைபிள் வாசகங்களை எழுதி சாதனை

தரங்கம்பாடி, ஜூலை-10

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில் தமிழை அச்சு வடிவில் கொண்டு வந்த முதல் முதலில் கொண்டு வந்த வெளிநாட்டவர் சீகன்பால்கு 317 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு தரங்கம்பாடியில் அமைந்துள்ள அவரது திருவுருவ சிலைக்கு தமிழ் சுவிசேஷ லுத்தரன் திருச்சபையின் பேராயர் ஏ.கிறிஸ்டியன் சாம்ராஜ் சீகன் பால்கு வந்த நாளான நேற்று அவரைப் போற்றும் வகையில் மாலை அணிவித்து மரியாதை செய்தார்.





கிருஸ்துவ மதத்தைப் பரப்பும் வகையில் சீகன்பால்கு டென்மார்க் நாட்டிலிருந்து இந்தியாவிற்கு கி.பி. 1706-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ம் தேதி தரங்கம்பாடி வந்து சேர்ந்தார். ஆனால் அவர் தமிழ் மொழியை உணர்ந்து தமிழகத்தில் உள்ள அனைவருக்கும் எழுத்து வடிவில் எடுத்துரைக்க தமிழ் மொழியை கற்றுக்கொண்டு எழுதவும், படிக்கவும், சரளமாகத் தமிழில் பேசவும் செய்தார். 1715-ம் ஆண்டு ஜெர்மனியிலிருந்து அச்சு இயந்திரம கொண்டு வந்து. தரங்கம்பாடி அருகே உள்ள பொறையாரில் கடுதாசிப் பட்டணத்தில் அச்சகம், காகித ஆலை, மை தயாரிக்கும் தொழிற்சாலை, பித்தளை மற்றும் இயம் போன்ற உலோகங்களால் தமிழ் எழுத்துக்கள் தயாரிக்கும் கூடத்தை அமைத்து தமிழ் அகராதிகளை கொண்டு வந்தவர் ஆவார். இவற்றின் மூலம் சீகன்பால்குவே இந்தியாவில் முதன்முதலாக தமிழ் மொழியில் பைபிளை (புதிய ஏற்பாடு) காகிதத்தில் அச்சடித்து நூலாக வெளியிட்டார். அதன்பின், தமிழ் நூல்களான திருக்குறள், தொல்காப்பியம், புறநானூறு, ஆத்திச்சூடி போன்ற எண்ணற்ற நூல்களை ஓலைச்சுவடியில் இருந்து, காகிதத்தில் அச்சடித்து புத்தகமாக வெளியிட்டார்.

தமிழ் இலக்கணம், கொடுந்தமிழ் அகராதி, செந்தமிழ் அகராதி, இந்து சமயக் கடவுள்களின் வரலாறு போன்ற நூல்களையும் படைத்திருக்கிறார். இன்று உலகின் பல்வேறு நாடுகளில் தமிழ்மொழி அங்கீகரிக்கப்பட்ட மொழியாக இருப்பதற்கு சீகன்பால்கு ஆவார். ஜெர்மனியில் உள்ள 'ஹால்வே' பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையைநிறுவுவதற்கும் இவர் பெரும் பங்காற்றியிருக்கிறார். தமிழர்களுக்கு கல்விக் கூடங்கள் அமைத்து இந்தியாவில் பெண்களுக்கென தனியாக முதல் பள்ளிக்கூடத்தை தொடங்கினார். ஆசியாவிலேயே முதல் தேவாலயமான புதிய எருசேலம் ஆலயத்தை தரங்கம்பாடியில் 1718-இல் அமைத்திருக்கிறார். 1719-இல் உயிரிழந்தார். சீகன்பால்குவின் உடல், தரங்கம்பாடி புதிய எருசேலம் ஆலயத்தின் பலிபீடம் முன்பு அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை அவரது நினைவு தினத்தையொட்டி புதிய எருசலேம் ஆலயத்தில் சிறப்பு வழிபாடும், அவரது உடல் புதைக்கப்பட்ட இடத்தில் மலர் தூவி,மாலைகள் அணிவித்து மரியாதை செய்யும் நிகழ்ச்சியும் நடைப்பெற்றது. இந்நிகழ்வில் தரங்கை பேராயர் ஏ. கிறிஸ்டியன் சாம்ராஜ் கலந்துகொண்டு சீகன்பால்கு சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தொடர்ந்து சீகன்பால்கு தமிழில் மொழி பெயர்த்த பைபிளை "கையெழுத்து வேதாகம சாதனை" என்ற பெயரில் இரண்டு மணி நேரத்தில் 1200க்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் 31,102 வசனங்களைக் கொண்ட 1464 பக்கங்களை எழுதி சாதனை படைத்தனர். இந்த சாதனை நிகழ்ச்சியை துவங்கி வைத்த தமிழ் சுவிசேஷ லுத்திரன் திருச்சபை பேராயர் கிறிஸ்டியான் சாம்ராஜ் செய்தியாளர்களை சந்தித்து கூறுகையில் :- தமிழறிஞர் சீகன்பால்கு வருகை தந்த 317 வது ஆண்டு தினம் கொண்டாடப்பட்டது. அவர் வருகையை நினைவு கூறும் வகையில் சீகன்பால்கு தமிழில் மொழி பெயர்த்த பைபிளின் தமிழ் மொழியாக்கத்தை கையெழுத்து வேதாகம சாதனை நிகழ்ச்சியாக 2 மணி நேரத்தில் 1464 பக்கங்களை 1200 க்கும் மேற்பட்ட நபர்கள் எழுதி சாதனை படைத்தனர். 1715 ல் சீகன்பால்கு தமிழில் அச்சடித்த பைபிளின் ஒரு பிரதி தஞ்சாவூர் மியூசியத்தில் இருந்து களவாடப்பட்டு லண்டன் மியூசியத்தில் உள்ளது தெரிய வந்துள்ளது.

யுனெஸ்கோ ஒப்பந்தத்தின்படி அந்த பைபிளை தமிழகத்திற்கு விரைவில் கொண்டு வந்து சீகன்பால்கு வாழ்ந்த அவரது வீட்டில் அமைக்கப்பட்டுள்ள தரங்கம்பாடி சீகன்பால்கு மியூசியத்தில் வைக்க வேண்டும், சீகன்பாகுவின் நினைவாக தரங்கம்பாடியில் மணிமண்டபம் அமைக்க வேண்டும், 1986 ல் நிறுத்தப்பட்ட தரங்கம்பாடி-மயிலாடுதுறை ரயில் சேவையை மீண்டும் துவங்க வேண்டும் என்று பேராயர் வேண்டுகோள் விடுத்தார்.

இதில் தரங்கம்பாடி புது எருசலேம் ஆலயம் சபைகுரு சாம்சன் மோசஸ், தரங்கை பேராயர் மாணிக்கம் லுத்தரன் கல்லூரி முதல்வர் ஜான்சன் ஜெயக்குமார்,பிஷப் ஜான்சன் மேல்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் ஜான் சைமன், சபைகுருமார்கள் உள்ளிட்ட ஏராளமான கிறிஸ்தவர்கள் கலந்து கொண்டனர்.

### கந்தர்வகோட்டை சுங்கச்சாவடி அருகே

# திருமணம் ஆகி இரண்டே வருடங்கள் ஆன வாலிபர் மீது அடையாளம் தெரியாத வாகனம் மோதி சம்பவ இடத்திலேயே பலி

கந்தர்வகோட்டை, ஜூலை.10–

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை அருகேஉள்ள சுந்தம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த செல்வராஜ் மகன் சதீஷ்குமார் (35 )என்பவர் தஞ்சை மாவட்டம் சக்கர ஆலையில் செக்யூரிட்டியாக பணிபுரிந்து வந்தார், நேற்று பணிக்குச் சென்று பணி முடித்துவிட்டு தனது இருசக்கர வாகனத்தில் வீடு திரும்பும் பொழுது சுங்கச்சாவடி அருகே அடையாளம் தெரியாத வாகனம் மோதி



சம்பவ இடத்திலேயே பலியானார் இதனைக் கண்ட அப்பகுதியினர் கந்தர்வகோட்டை காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர்.

தகவல் அறிந்து வந்த காவல் துறையினர் சதீஷ்குமார் பிரேத உடலை கைப்பற்றி புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர், சதீஷ்குமாருக்கு திருமணமாகி இரண்டு வருடங்கள் ஆன நிலையில் ஆறு மாத கைக்குழந்தை ஒன்று உள்ள நிலையில் உயிரிழந்த சம்பவம் அப்பகுதி பொதுமக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது,மேலும் இச்சம்பவம் குறித்து கந்தர்வக்கோட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் அருகே மகளிர் கல்லூரியில் பேரவை தேர்தல் நடைபெற்றது



தென்காசி,ஜூலை.10–

தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சுப்பிரமணியபுரத்தில் வியாசா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் பேரவை தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தல் இந்திய அரசியல் அமைப்பு சட்டப்படி அனைத்தும் நடந்தன, வேட்பாளர் அவரவர் துறை சார்ந்த சின்னங்களை மாணவியர்கள் தேர்ந்தெடுத்தனர். மாணவியர்கள் ஊர்வலமாகவந்து வேட்பு மனு தாக்கல் செய்தனர், இதில் ஆட்டம், பாட்டம், கொண்டாட்டமாக இருந்தனர் இரண்டு நாட்கள் வாக்குகளை சேகரித்த பின்னர் மொத்தம்ஒன்பதுஎலக்சன் பூத்துகளில் மாணவியர் வாக்களித்தனர் உடனே வாக்குகள் எண்ணப்பட்டு வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு வெற்றி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

மேலும் பதவியேற்பு விழா, முடிசூட்டு விழா ஆகஸ்ட் 15–ம் தேதி சுதந்திர தின விழாவில் நடைபெறும் போட்டியில் 29 மாணவிகள் டெபாசிட் இழந்தனர், போட்டியில் ஹரிஷ் மிதா மாணவிகள் பேரவை தலைவியாகவும், ஆசன்பீவி துணைத் தலைவியாகவும் தேர்வு செய்யப்பட்டனர். கார்த்திகா விளையாட்டு துறை செயலாளராகவும், ஸ்வேதா துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கல்லூரியின் தேர்தல் கமிட்டி விழா ஏற்பாடுகளை செய்தனர் வெற்றி பெற்ற மாணவிகளை வியாசகல்லூரி சேர்மன் வெள்ளத்துரை பாண்டியன், நிர்வாக இயக்குனர் வெள்ளத்துரைச்சி, முதல்வர்ஈஸ்வரன்தேர்தல் ஒருங்கிணைப்பாளர் சுஜாதா மற்றும் துறை சார்ந்த பேராசிரியர் பெருமக்கள் வெற்றி பெற்றவர்களுக்கு பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டனர்.

# புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் 48 ஆம் ஆண்டு கம்பன் பெருவிழா பந்தல்கால் முகூர்த்தம் நடப்பட்டது ஜூலை 14ஆம் தேதி தொடங்குகிறது



**புதுக்கோட்டை , ஜூலை.10–**

கடந்த ஆண்டுகளைப் போல் பல்வேறு சிறப்புகளைக் கொண்டு புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் 48 ஆம் ஆண்டு பெருவிழா ஜூலை 14ஆம் தேதி வெள்ளிக்கிழமை தொடங்கி ஜூலை 23ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை நிறைவுபெறஇருக்கின்றது. இப்பெருவிழாவுக்கான பந்தல்கால் முகூர்த்தம் இன்று நகர் மன்றத்தில் நடைபெற்றது.

கம்பன் கழகத் துணைத் தலைவர்கள் எம்.ஆர்.எம் முருகப்பன், பேக்கரி மகராஜ் அருண் சின்னப்பா,பொருளாளர் சி. கோவிந்தராஜன், துணைப் பொருளாளர் கருராமசாமி,செயலாளர் ரா.சம்பத்குமார், கூடுதல் செயலாளர் புதுகை ச.பாரதி, இணைச் செயலாளர்கள் காடுவெட்டி குமார், பேராசிரியர் முருகையன், ரா.கருணாகரன், விழா குழு உறுப்பினர்கள் பேராசிரியர் ரவிச்சந்திரன், நிலவை பழனியப்பன், காந்திநாதன் ஒப்பந்தக்காரர் கர்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியை முத்துக்குமார் குருக்கள் நடத்தி வைத்தார்.

10 நாட்கள் நடைபெறும் கம்பன் பெருவிழாவில் துவக்க நாளான முதல் நாள் வெள்ளிக்கிழமை நிகழ்ச்சிக்கு அமெரிக்கா ஜனநாயக கட்சியின் பொறுப்பாட்சியர்ராஜன் நடராஜன் தலைமை வைக்கிறார். அதனைத் தொடர்ந்து நடைபெறும் அடுத்தடுத்த நாட்களில் உண்டான நிகழ்வுகளில் மும்பை எம்எல்ஏ தமிழ்ச்செல்வன், புதுச்சேரி முன்னாள் சபாநாயகர் சிவக்கொழுந்து, கம்பவாதிரி இலங்கை ஜெயராஜ், சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் அரங்க. மகாதேவன், ஆர்.சுரேஷ்குமார், அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருச்சி சிவா, தொல் திருமாவளவன், திருநாவுக்கரசர், எம். எம். அப்துல்லா, சட்டமன்றஉறுப்பினர்கள் விஜயபாஸ்கர், முத்துராஜா.சின்னத்துரை, பட்டிமன்றம் நடுவர்கள் டாக்டர் ஜெய ராஜமூர்த்தி, கு. ஞானசம்பந்தன், பாரதி பாஸ்கர், திருவாரூர் சண்முகவடிவேல், பத்மமோகன், தென்காசி ராமச்சந்திரன், தொழிலதிபர் திண்டுக்கல் ரத்தினம், கவிஞர் மரபின் மைந்தன் முத்தையா, திலகவதியார் திருவருள் ஆதீன கர்த்தர் தயானந்த சந்திரசேகர சுவாமி, திருச்சி முன்னாள் மேயர் சாருபாலா தொண்டைமான், புதுக்கோட்டை கலெக்டர் மெர்சி ரம்யா, உள்ளிட்ட பல்வேறு சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள் விழாவிற்கான ஏற்பாடுகளை புதுக்கோட்டை கம்பன் கழகத்தின் தலைவர் எஸ்.ராமச்சந்திரன், செயலாளர் ஆர். சம்பத்குமார் உள்ளிட்ட கம்பன் கழக நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

### புதுக்கோட்டையில்

# மாஸ்டர்ஸ் செஸ் அகாடமியை நகரச் செயலாளர் செந்தில் தொடங்கி வைத்தார்



புதுக்கோட்டை, ஜூலை.10–

புதுக்கோட்டை கணேஷ்நகரில் மாஸ்டர்ஸ் செஸ் அகாடமி குழந்தைகள் மாணவ, மாணவியருக்கான செஸ் விளையாட்டு பயிற்சி நிறுவனம் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

தொழில் அதிபர் சையது முகமது தலைமைதாங்கினர் திமுக பிரமுகர் நகரச் செயலாளர் செந்தில் சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டு செஸ் அகாடமி பிரிவை தொடங்கி வைத்து பேசினார். நிகழ்வில் தொழில் அதிபர் சையது முகமது வனத்தோட்ட கழகம் ஜோசப் ஆரோக்கியராஜ் ஜெயராணி பள்ளி முதல்வர் ஈஸ்வரன் நகர்மன்ற உறுப்பினர்கள் செந்தாமரைபாலு, பிரேம் ஆனந்த் மாஸ்டர்ஸ் செஸ் அகாடமி,பி.சேதுராமன். சபிபுல்லா இக்பால் சமூக ஆர்வலர் கள் சர்வதேச சதுரங்க வீரர்கள் கலந்து கொண்டனர். செஸ் விளையாட்டுவீரர் சிறுவன் கவிரூபன் மாவட்ட மற்றும் மாநில அளவில் பல்வேறு விருதுகளை பெற்றதை பாராட்டி நகரச் செயலாளர் திமுக செந்தில் ஊக்கதொகை வழங்கி பாராட்டினார் மாஸ்டர்ஸ் செஸ் அகாடமியின் நிறுவனர் வே. பார்த்திபன் அனைவரையும் வரவேற்றார் முடிவில் செஸ் அகாடமி, மாஸ்டர்ஸ் பி.சேதுராமன் நன்றி கூறினார் செஸ்விளையாட்டுவீரர் பெற்றோர்கள் சமூக ஆர்வலர்கள், கல்வியாளர்கள் கலந்து கொண்டனர்.

### உளுந்தூர்பேட்டை பகுதியை சேர்ந்த

# கால்பந்து வீராங்கனைக்கு கிராம பொதுமக்கள் உற்சாக வரவேற்பு



கள்ளக்குறிச்சி, ஜூலை,10_

பஞ்சாபில் நடைபெற்ற 27–வது தேசிய மகளிர் சீனியர் கால்பந்து போட்டியில் தமிழ்நாடு அணி கலந்து கொண்டு விளையாடி வெற்றிபெற்று சாம்பியன் பட்டத்தை வென்றனர், தமிழ்நாடு அணியில் பங்குபெற்று சிறப்பாக விளையாடிய,

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே உள்ள பூ.மாம்பாக்கம் கிராமத்தை சேர்ந்த நாராயணன் மகள் அம்சவள்ளிக்கு நேற்று அவருடைய சொந்த ஊரான பூ.மாம்பாக்கம் கிராமத்தில் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி சிறப்பான வரவேற்பு அளித்தனர்.

# மன அழுத்தத்தைக் குறைக்க பல்வேறு முயற்சிகளை காவல்துறை எடுத்து வருகிறது

**முன்னாள் டிஜிபி சைலேந்திரபாபு தகவல்**

சென்னை, ஜூலை.10–

மன அழுத்தத்தை குறைக்க பல்வேறு முயற்சிகளை காவல்துறை தொடர்ந்து எடுத்து வருவதாக முன்னாள் டிஜிபி சைலேந்திரபாபு தெரிவித்தார்.

சென்னை தரமணியில் உள்ள மத்திய பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் சென்னை சைக்ளிஸ்ட்ஸ் (Chennai cyclists) அமைப்பு நடத்தும் சென்னை மிதிவண்டி திருவிழாவில் "(CHENNAI CYCLING THIRUVIZHA)" முன்னாள் டிஜிபி சைலேந்திரபாபு கலந்து கொண்டார். அப்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர், "சென்னையில் வசிக்கும் மக்கள் இங்கு வருகை தந்து சைக்கிள் திருவிழாவை பார்க்க வேண்டும். ஆன்லைன் விளையாட்டுகள் விளையாடுவதைதவிர்த்து சைக்கிள் ஓட்டுவது, உடற்பயிற்சி செய்வது போன்றவற்றில் இளைய தலைமுறையினர் கவனம் செலுத்த வேண்டும்." என்று தெரிவித்தார்.

டிஐஜி தற்கொலை தொடர்பான கேள்விக்கு, "கோவை சரக டிஐஜி தற்கொலை செய்து கொண்டது துரதிஷ்டவசமானது. அவருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். மன அழுத்தத்தில் இருந்ததை தெரிந்து முன்கூட்டியே அதற்கான சிகிச்சைகளை எடுத்துள்ள போதிலும் இதுபோன்று நடந்துள்ளது கவலை தருகிறது.

காவல்துறையினருக்கு ஏற்படும்மன அழுத்தத்தைக் குறைப்பதற்கு பல்வேறு முயற்சிகளை காவல்துறை தொடர்ந்து எடுத்து வருகிறது. காவல்துறையை சார்ந்தவர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு மனநல பயிற்சியாளர்களாகவும் அவர்களை உருவாக்கியுள்ளோம். அவர்கள் மற்ற காவலர்களுக்கு மன அழுத்தத்தில் இருந்து விடுபடுவது குறித்த பயிற்சிகளை அளிக்கின்றனர்."இவ்வாறு அவர் கூறினார்.

# உளுந்தூர்பேட்டை அருகே பேருந்துகள் மீது இரவு நேரங்களில் கற்களை வீசிய சம்பவம்

**சிறுவன் உள்பட4 பேர் கைது**



கள்ளக்குறிச்சி, ஜூலை,10_

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே உள்ள எ.குமாரமங்களம் காப்பு காடுகள் பகுதியில் சேலம் சென்னை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு இரவு நேரங்களில் தொடர்ந்து, அரசு மற்றும் தனியார் பேருந்துகள் மீது கற்களை வீசி வந்த மர்மநபர்களால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது, இதனால் இவ்வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் அச்சத்துடன் சென்று கொண்டிருந்த நிலையில்,

இச்சம்பவம் குறித்து கள்ளக்குறிச்சி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மோகன்ராஜ் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு குற்றவாளிகளை கண்டுபிடிக்க மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் மணிகண்டன் தலைமையில் தனிபடை அமைத்து, உளுந்தூர்பேட்டை உட்கோட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மகேஷ், திருநாவலூர் காவல் நிலைய ஆய்வாளர் அசோகன், உதவி ஆய்வாளர்கள் திருமால், ஆனந்தராஜ், அலெக்ஸ், பசலைராஜ், மற்றும் காவலர்கள் சம்பவ இடத்திற்குச் சென்று சேகரித்த தடையங்கள் மற்றும் கண்காணிப்பு கேமரா காட்சிகளை கொண்டு மாவட்ட சைபர் செல் உதவியோடு தீவிர விசாரணை மேற்கொண்டதில், இப்பகுதிக்கு அருகே உள்ள சிறுபாக்கம் கிராமத்தை சேர்ந்த சிங்காரவேல் மகன் குமரேசன் (33), கொளஞ்சி மகன் சந்துரு (22), எடைக்கல் கிராமத்தை சேர்ந்த சன்னியாசி மகன் ஜோதி (29), மற்றும் சிறார் ஒருவர் மற்றும் சில பேர் இச்சம்பவத்தில் ஈடுபட்டது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து குமரேசன், சந்துரு, ஜோதி ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர், மேலும் அரசு கூர்நோக்கு இல்லத்திற்கு சிறாரை அனுப்பி வைத்தனர், மேலும் இக்குற்றசம்பவத்தில் ஈடுபட்டு தலைமறைவாக உள்ள குற்றவாளிகளை தனிப்படையினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

# தென்காசி வடக்கு மாவட்ட இளைஞர் அணி அறிமுக கூட்டம் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம் இன்று நடக்கிறது

**வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ அறிக்கை**

சங்கரன்கோவில். ஜூலை.10.

தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ விடுத்துள்ள அறிக்கையில், தென்காசி வடக்கு மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள் அறிமுக கூட்டம் மற்றும் செயல் வீரர்கள் கூட்டம்



ராஜபாளையம் சாலையில் உள்ள ஹம்சா அரங்கில் வைத்து இன்று திங்கள்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும் எனவும் , எனவே இதில் மாநில, மாவட்ட, மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள்,ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்துகொள்ளவேண்டும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.




► மதுரையில் நடைபெற்ற சென்ட்ரல் ரோட்டரி சங்க நிர்வாகிகள் பதவியேற்பு விழாவில் தலைவர் சுரேஷ் பாண்டியன், செயலாளர் சஞ்சய், பொருளாளர் பிரசன்னா ஆகியோர் பதவி ஏற்றனர், இதில் சிறப்பு விருந்தினராக முன்னாள் ரோட்டரி கவர்னர் ஆர். வி.என்.கண்ணன் கலந்து கொண்டு சிறப்பித்தார், இந்நிகழ்ச்சியில் ரோட்டரி துணை ஆளுநர் மகேஷ் குமரவேல் மற்றும் கௌசல்யா உள்பட ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# குற்றாலத்தில் தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி கணினி ஆசிரியர்கள் சங்க மாநில செயற்குழு கூட்டம்

தென்காசி, ஜூலை.10–

தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளி கணினி ஆசிரியர்கள் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மாநிலத் தலைவர் செல்வக்குமார் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலாளர் சுரேஷ்குமார் முன்னிலை வகித்தார், மாநில செயலாளர் வீரமணி வரவேற்புரை ஆற்றினார். மாநில செய்தி தொடர்பாளர் கலைவாணன் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கினார்.



இதில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்களது கணக்கில் உள்ள ஈட்டிய விடுப்பு நாட்களை ஒப்படைப்பு செய்ய ஆணை வழங்க வேண்டும், 2013ல் பணி நீக்கம் செய்யப்பட்ட 652 கணினி பயிற்றுனர் ஆசிரியர்களுக்கு மீண்டும் பணி வழங்க வேண்டும், மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பதவி உயர்வுக்கான பெயர் பட்டியலில் கணினி அறிவியல் பாட ஆசிரியர்களையும் சேர்க்க வேண்டும், உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்நிகழ்ச்சியில் சசிதரன் லட்சுமி நரசிம்மன், சங்கர், தங்கபாண்டியன், ரூபா, பாபுபத்மசங்கர், மகேந்திரன், ஷெரின் சுதந்திரசீலன், பழனிச்சாமி, சரவணன், விஜயபாஸ்கர், குருமூர்த்தி, ராஜலட்சுமி, சிவக்குமார், தியாகராஜன், ஜஹாங்கீர், சதீஷ் ராஜ், வேலுமணி, ராஜேஸ்வரன், முரளிதரன், சுரேஷ்குமார், ஆனந்தகுமார், ரமேஷ்பிரகாஷ், ரவிச்சந்திரன், குமார், முனியசாமி, ஜீவானந்தம், ராஜாராம், முரளி, கிருஷ்ணமூர்த்தி, சித்ராதேவி, ஜோஸ்பின்லீனா, பிந்து, உமாராணி, சாந்தி, உள்ளிட்ட நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர், முடிவில் மாநில பொருளாளர் பழனிவேல் அனைவருக்கும் நன்றி கூறினார்.

PUDUGAI VARALARU – National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# ஆளுநர் மீது புகார் குடியரசு தலைவருக்கு 15 பக்க கடிதம் அனுப்பினார் முதல்வர்

# பொன்னமராவதியில் புதிதாக கட்டப்பட்ட நீர்தேக்க தொட்டியில் ஓட்டை





# எம்பிபிஎஸ்., பிடிஎஸ்., படிப்புகளுக்கு விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிப்பு


சென்னை / புதுக்கோட்டை | 10.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கரிச்சான் குஞ்சு , தமிழக எழுத்தாளர் (பி.1919) (இ.1992)



மகாதீர் பின் முகமது , மலேசியாவின் 4வது பிரதமர் (பி.1925)



கே. எஸ். பாலச்சந்திரன் , ஈழத்து-கனடிய நடிகர், நாடகக் கலைஞர் (பி.1944) (இ.2014)



சுனில் காவஸ்கர் , இந்தியத் துடுப்பாளர் (பி.1949)



ராஜ்நாத் சிங் , இந்திய அரசியல்வாதி (பி.1951)



## இன்றைய நினைவு நாள்

காந்தரூபன் , விடுதலைப் புலிகளின் கரும்புலி (பி.1971) (இ.1990)



நாவேந்தன் , ஈழத்து எழுத்தாளர் (பி.1932) (இ.2000)

